# 12 தமிழ் – இயல் 4 – பண்டைய காலத்துப் பள்ளிக் கூடங்கள்

இரண்டு மதிப்பெண் வினா விடை

1. **அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?**

- நிகண்டு , நன்னூல் , காரிகை , தண்டியலங்காரம் ,நீதி நூல்கள் முதலிய தமிழ் நூல்கள் அக்காலத்து மனனப் பயிற்சிக்குப் பெரிதும் உதவியன.
- கீழ்வாயிலக்கம் , மேல்வாயிலக்கம் , குழிமாற்றி முதலிய பல்வேறு வாய்பாடுகள் கணிதத்தில் மனனப் பயிற்சிக்கு உதவின
- சிறுவர்கள் படிக்கும் ஆத்திச்சூடி , கொன்றை வேந்தன் முதலிய அகராதி நூல்களும் அக்காலத்து மனனப் பயிற்சிக்கு உதவின.

நான்கு மதிப்பெண் வினா விடை

1. **மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க**

- பழங்காலத்தில் பிள்ளைகள் முதன்முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள்.
- அதலால் , அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்திருந்தன.
- பழங்காலத்தில் பனை ஓலைகளிலும் , தாழை மடல்களிலும் எழுத்தாணியைப் பயன்படுத்தி எழுதினார்கள்
- எழுத்தாணியில் பல்வேறு வகைகள் இருந்தன.
- சுவடியில் ஒரு பக்கத்தில் இருபது முப்பது வரிகள் வரை மிக நுண்ணிய எழுத்துகளாக எழுதினார்கள்
- தற்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்றே சுவடியிலும் மிக வேகமாக எழுதினார்கள்

2. **நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்**?

- நான் ஆசிரியரானால் மாணவர்களை அன்பினால் வழிநடத்துவேன்.
- படிப்பில் பின்தங்கிய மாணவர்களிடம் அன்புடன் பேசி , கற்றல் குறைப்பாட்டிற்கான காரணத்தை அடையாளம் கண்டு வழிநடத்துவேன்.
- மாணவர்களின் குடும்ப சூழ்நிலையை உணர்ந்து , அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறி வழிநடத்துவேன்.
- தவறான பாதையில் செல்லும் மாணவர்களைத் தனியாக அழைத்து , அத்தவறினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்கூறி நல்வழிப்படுதுவேன்.
- மாணவர்களுக்குக் கொடிய தண்டணைகளை வழங்க மாட்டேன்

நெடு வினா

1 . பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் , கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுது

- காலம் மாற மாற கல்வி முறையில் பல்வேறு மாற்றங்கள் நடைப் பெற்று வருகின்றன.
- பண்டையக் காலத்தில் உபத்தியாரின் (ஆசிரியர்) வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பார்கள் .

- அதன் பின், ஊரின் பொதுவான இடத்தில் உள்ள மரத்தடியில் மன்றம் எனும் பெயரில் பள்ளி இருந்தது.
- அம் மன்றம் காலப்போக்கில் திண்ணைப் பள்ளிக் கூடமாக மாறியது.
- பள்ளி எனும் சொல் சமண மத பாடசாலைகளையே குறிக்கும்.
- பிள்ளைகளின் ஐந்தாம் வயதில் முதன்முதலாகப் பள்ளியில் சேர்த்தனர். தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியரிடம் அடைக்கலமாகக் கொடுத்தனர்.
- ஆசிரியர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க , மாணவர்கள் அதனைப் பின்பற்றிச் சொல்வார்கள்.
- பிள்ளைகள் முதன் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். ஆசிரியர் முதலில் தரையில் எழுத , அதன்மேல் மாணவர்கள் எழுதிப் பழகுவார்கள்.
- பண்டைக் காலத்தில் மனனக் கல்விப் பயிற்சி முறையே இருந்தது.
- பண்டைக் கால கல்வியில் வாதம் புரிதலுக்கு முக்கிய இடம் உண்டு. கேள்விக் கேட்டும், கருத்திற்கு உடன்பட்டும் மறுத்தும் கற்றனர்.
- பண்டைக் கால ஆசிரியர்கள் மாணவர்களை அன்பினால் வழிநடத்தினார்கள்.
- பண்டைக் காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை.
- ஆசிரியர் மீதிருந்த மரியாதை மாணவர்களுக்குப் பயத்தை உண்டாக்கியது.
- பண்டைக் காலத்தவர் , தாம் கற்காத கலைகளை அக்கலையில் தேர்ந்த ஆசிரியர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று கற்றனர்.
- பண்டை காலத்தில் பள்ளிகளில் கற்றதோடு நில்லாமல் வாழ் நாள் முழுவதும் கற்றனர்

## இயல் : 4 செய்யுள் , இதில் வெற்றிப் பெற.. சுரதா

இரண்டு மதிப்பெண் வினா விடை

**1. .வசனம் , கவிதை வேறுபாடு விளக்குக**

வசனம் மற்றும் கவிதைகளுக்கான வேறுபாடுகளாகச் சுரதா கூறுவன ;

- எதுகை மோனை சேர்க்காமல் ; அடியளவு பற்றி அறிந்திடாமல் எழுதுவது வசனம்.
- யாப்பிலக்கணத்திற்கு உட்பட்டு , கவிஞனால் வந்தடங்கும் வார்தைகளால் இயற்றப்படுவது கவிதை.

நெடு வினா :

1. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

- உரைநடை எழுதும் முறையிலிருந்து கவிதை எழுதும் முறை வேறுபடுகின்றது.

<u>**கவிதையின் உறுப்புகள் :**</u>

- எதுகை , மோனை , இயைபு , சந்தம் என பல்வேறு நயங்களைக் கொண்டு கவிதை விளங்குகின்றது .

- யாப்பிலக்கணத்திற்கு உட்பட்டு சொற்களைக் கட்டமைக்க வேண்டும்.
- சிறந்த எழுத்துகளைக் கொண்டு நேரசை நிரையசைகளை அமைக்க வேண்டும்.
- அவ் அசைகளைக் கொண்டு சீர்களை உருவாக்க வேண்டும்.
- முன் பின் நிற்கும் இரு சீர்களைக் கட்டுவதால் பாவிற்குரிய தளை தோன்றும்.
- தளைகளைச் சேர்த்தால் அடிகள் உருவாகும்.
- அடிகளை ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கினால் தொடை உருவாகும்.
- தொடைகள் நன்கு அமைந்திருந்தால் நல்ல ஓசை நயம் மிகுந்த கவிதை கிடைக்கும்

**நல்ல கவிதை ;**

- கவிதையின் உறுப்புகளை நன்கு தெரிந்துகொண்டு கவிதை எழுத்த தொடங்கினால் நல்ல கவிதையைப் படைக்கலாம்
- கவிதையின் சீர்களில் மாச்சீர் , விளச்சீர் மிகுந்து வரும்படி எழுதினால் தேமா புளிமா சிறப்பாக அமையும்
- சீர்களைத் தவறாக அமைத்தால் பாடலுக்குரிய தளை மாறிவிடும்.
- மலரை நோக்கி தேனீக்கள் வருவது போல , நல்ல கவிதையை நோக்கி புகழ் வரும்.
- எளிய மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் கவிதையை எழுத வேண்டும்.

➢ என்று கவிதை எழுதுவது பற்றிச் சுரதா கூறியுள்ளார் .

## இயல் – 4 ; செய்யுள் – இடையீடு...

இரண்டு மதிப்பெண் வினா விடை

1 . இடையீடு - எவற்றைக் குறீயீடாக் குறிப்பிடுகிறது

சி . மணி எழுதிய இடையீடு எனும் கவிதை குறியீடுகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

➢ கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம் ,
➢ அதனை வெளிப்படுத்தும் வண்ணம் ,
➢ எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மன நிலை

முதலியவற்றைக் குறியீடாகக் கொண்டு இடையீடு எனும் கவிதை பன்முகப் போருள் தருகின்றது.

நான்கு மதிப்பெண் வினா விடை

1 . “ மூன்றான காலம் போல் ஒன்று “ – எவை ? ஏன் ? விளக்குக

- இறந்த காலம் , நிகழ் காலம் , எதிர் காலம் என்று காலம் மூன்றாகப் பகுக்கப்பட்டாலும் ; காலம் கடந்த பொழுது ஒன்றாகவே தோன்றும் .
- அதுபோல்.. கவிதையில் எண்ணம் , வெளியீடு , கேட்டல் ஆகியனவும் வெவ்வாறானவை.

- ➢ கவிதையை எழுதும் கவிஞரின் எண்ணம் ,
- ➢ வெளிப்படுத்தும் முறை ,
- ➢ வாசகனின் கேட்கும் திறம்

ஆகிய மூன்றும் ஒன்றாக அமைவதில்லை ; ஒரே விளைவை ஏற்படுத்துவதுமில்லை. - எனும் கருத்தை " மூன்றான காலம் போல் ஒன்று " எனும் வரி விளக்குகின்றது.

## இயல் : 4 – செய்யுள் – புறநானூறு

இரண்டு மதிப்பெண் வினா விடை

1 . " எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் " – யார்க்கு ?

- கலைத்தொழிலில் வல்ல கலைஞர்கள் எத்திசைக்குச் சென்றாலும் உணவு தவறாது கிடைக்கும்
- கல்வி அறிவில் சிறந்து விளங்கும் புலவர்கள் சென்ற இடமெல்லாம் மதிக்கப்படுவார்கள் .

நான்கு மதிப்பெண் வினா விடை

1 . வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக

**பாடாண் திணை – விளக்கம் :**

- பாடு + ஆண் + திணை = பாடாண் திணை
- ஒருவருடைய புகழ் , வலிமை , கொடை , அருள் முதலிய நல்லியல்புகளைச் சிறப்பித்துப் பாடுவது பாடாண் திணை எனப்படும்

**பாடல் – பொருத்தம்** :

- அதியமான் நெடுமான் அஞ்சி எனும் மன்னன் பரிசிலர்க்காக அடைக்காத வாயில்களை உடையவன் .
- மக்களைக் காக்கும் மன்னர்களின் வழித்தோன்றல் .
- அறிவும் புகழும் உடையவர்களைப் போற்றும் தன்மை உடையவன்.

என்று அதியமானின் புகழ் , கொடை முதலான பண்புகள் இப் பாடலில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளாதால் , இது பாடாண் திணை ஆயிற்று

## இயல் : 4 - துணைப் பாடம் - பாதுகாப்பாய் ஒரு பயணம் ...

நெடு வினா

1 . சாலை விபத்தில்லா தமிழ்நாடு – எக் கூற்று நனவாக நாம் செய்ய வேண்டுவன யாவை ?

- உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு இந்தியா .
- ஏறக்குறைய 55 இலட்சம் கி.மீ. சாலைகள் நம் நாட்டில் உள்ளன .
- நம் நாட்டில் 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் உள்ளன .
- அதனால் விபத்துகள் மிகுதியாக நடக்கின்றன.
- ஓர்ஆண்டிற்கு ஏறக்குறைய ஐந்து இலட்சம் விபத்துகள் நடக்கின்றன .
- அதில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர்.
- சுமார் இரண்டு இலட்சம் பேர் தங்கள் உடலுறுப்புகளை இழந்து துன்பத்தில் வாடுகின்றனர்.
- தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே அதிகமான சாலை விபத்துகள் நடைப் பெறும் மாநிலமாக உள்ளது

- இந்தியாவில் நடைப் பெறும் சாலை விபத்துகளில் தமிழ் நாட்டில் தான் 15 விழுக்காடு விபத்துகள் நடைப் பெறுகின்றன.
- மனிதத் தவறுகளே மிகுதியான விபத்துகளுக்குக் காரணங்களாக அமைகின்றன .
- தவறுகளைத் திருத்திக்கொள்ளுதல் , விதிகளைப் பின்பற்றுதல் வாயிலாக மட்டுமே சாலை விபத்துகளைத் தடுக்கமுடியும்.
- தமிழ்நாட்டில் நடைபெறும் விபத்துகளில் 35 விழுக்காடு இரு சக்கர ஊர்திகளால் ஏற்படுகின்றன.
- பதினெட்டு வயது நிறைந்தவர்கள் மட்டுமே முறையானப் பயிற்சியின் மூலம் ஓட்டுநர் உரிமம் பெற்று, இருசக்கர ஊர்தியை இயக்க வேண்டும்.
- பள்ளி மாணவர்கள் இரு சக்கர வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.
- இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது , கண்டிப்பாக தலைக் கவசம் அணிந்தே செல்ல வேண்டும்.
- இரு சக்கர வாகனத்தில் இரண்டு பேருக்கு மேல் பயணிப்பது மிகவும் தவறு
- கைபேசியில் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டக் கூடாது .
- சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக வாகனத்தை இயக்குவது மிகவும் தவறு
- காதணி கேட்பிகள் பொருத்திக்கொண்டு ஊர்திகளை ஓட்டுவது எனப் பல காரணங்களால் இருசக்கர வாகன விபத்துகள் பெருமளவில் நடக்கின்றன .
- இத்தகைய ஒழுங்கீனச் செயல்களைத் தவிர்த்தால் விபத்துகள் ஏற்படா.
- மாணவர்கள் சாலை விதிகளை அறிந்துகொள்வதன் மூலமாகவும் , சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுதுவதன் மூலமாகவும் தமிழகத்தை சாலை விப்த்தில்லா மாநிலமாக உருவாக்க முடியும்.

---

ஆக்கம் : வே . சக்திவேல் , முதுகலைத் தமிழாசிரியர் , அரசினர் மேல்நிலைப் பள்ளி , இராயபுரம் , திருவாரூர் மாவட்டம்.